Lifeline

மீண்டும் வாழ்வோம்

இடம்பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமான தகவல் பரிமாற்றம்

Humanitarian Information For IDPs

Vol 1 - No 9 Pages 4 Sunday, 20 April 2008 Free Copy

உலக சுகாதார தினமும் சுகாதார விழிப்புணர்வுகளும்

மனிதனின் வாழ்க்கைத்தரம் அதிகரித்து வரும் அதேவேளை தொழில்நுட்பம் வேகமாக முன்னேறும் நிலையிலும் சுகாதாரம் தொடர்பான ஏதாவது ஒரு உடல் நோய் மனிதனை பீடித்து இருப்பதை அவதானிக்க கூடியதாக இருக்கின்றது.

இவ்வருட சுகாதார தினத்தில் காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் விளைவுகளில் இருந்து மனிதனை பாதுகாக்கும் முறைகள் குறித்து உலக சுகாதார ஸ்தாபனம் கவனம் எடுத்துள்ளது.

காலநிலை மாற்றம் காரணமாக ஏற்படும் நோய்களை பற்றி கருத்து வெளியிட்ட கிளிநொச்சி ஆதார வைத்தியசாலை அதிகாரி வைத்திய கலாநிதி சத்தியமூர்த்தி தொற்று நோய்கள் கூடுதலாக வரலாம் என எதிர்பார்க்கப்படுவதாகவும் குறிப்பாக மலேரியா, டெங்கு, சிக்கன் குனியா போன்ற நோய்களும் இந்த பகுதிகளிலே பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்

அத்துடன் காலநிலை மாற்றத்தினால் வெப்பம், மழை வீழ்ச்சிகளில் ஏற்படுகின்ற மாற்றங்களினால் காற்றினாலும் நீரினாலும் பரவக்கூடிய பல்வேறு தொற்று நோய்கள் அதிகளவில் பரவும் நிலை தோன்றும் என்றும் அவர் கூறினார்.

சாதாரண சூழ்நிலையில் வாழும் மக்களுக்கே உடல் உபாதைகள் ஏற்படுவது வழக்கம் அவ்வாறான நிலையில் கிளிநொச்சி போன்ற பிரதேசங்களில் அடிக்கடி ஏற்படும் இடம்பெயர்வுகள் காரணமாக வழமையை விட அதிகளவில் மக்கள் பாதிப்புக்கு உள்ளாவதாக தெரிவிக்கப்படுகிறது.

சத்தமான குடிநீரே சுகாதாரத்தின் அடிப்படை

இடம்பெயர்ந்து இருக்கின்ற பிரதேசங்களில் அவர்களுக்கு நன்னீர் கிடைப்பது கரடாக இருந்தாலும் கிடைக்கின்ற நீரை கொதிக்க வைத்து ஆறிய பின் குடிப்பதன் மூலம் அவ்வாறு தொற்றுகள் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களை அவர்கள் தவிர்த்துக் கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார்

A9 பாதை மூடிய பின்னர் யாழ் குடாநாட்டு மக்கள் உணவு தொடர்பில் எதிர்நோக்கிய சிக்கல்கள் தற்போது படிப்படியாக குறைந்து வருவதாகவும் சிறுவர்களுக்கும் கர்ப்பிணித் தாய்மார்களின் ஆரோக்கியத்திற்கும் தேவையான உணவு மற்றும் மருந்துப் பொருட்களை குடாநாட்டிற்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் சத்தியமூர்த்தி மேலும் கருத்து வெளியிடுகையில் இடம்பெயர்ந்து இருக்கின்ற மக்கள் அவர்களுடைய இருப்பிட வசதிகள் உணவு போஷாக்கு பிரச்சினை காரணமாக போஷாக்கு சம்பந்தப்பட்ட நோய்களுக்கு உட்படுவதோடு தொற்று நோய்களாலும் பாதிக்கப்படுவதாக கூறினார்

அந்த வகையில் இடம்பெயர்ந்த மக்களில் சிலர் கவர நோய்களுக்கும் உணவு சம்பந்தப்பட்ட நோய்களுக்கும் உள்ளாகி இருக்கின்றார்கள்.

நீர் சம்பந்தப்பட்ட நோய்களின் தாக்கங்கள் குறித்து அவர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும்

இடம்பெயர்ந்து இருக்கின்ற பிரதேசங்களில் அவர்களுக்கு நன்னீர் கிடைப்பது கடினமாக இருக்கும் என்றாலும் கிடைக்கின்ற நீரை கொதிக்க வைத்து ஆறிய பின் குடிப்பதன் மூலம் அவ்வாறு தொற்றுகள் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களை அவர்கள் தவிர்த்துக் கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார்

A9 பாதை மூடிய பின்னர் யாழ் குடாநாட்டு மக்கள் உணவு தொடர்பில் எதிர்நோக்கிய சிக்கல்கள் தற்போது படிப்படியாக குறைந்து வருவதாகவும் சிறுவர்களுக்கும் கர்ப்பிணித் தாய்மார்களின் ஆரோக்கியத்திற்கும் தேவையான உணவு மற்றும் மருந்துப் பொருட்களை குடாநாட்டிற்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் யாழ் போதனா வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் தெரிவித்தார்

திரிபோஷா எனப்படுகின்ற சத்துணவை கர்ப்பிணித் தாய்மார்கள் பாலூட்டும் தாய்மார்கள் 5 வயதிற்கு உட்பட்ட குழந்தைகள் நிறை குறைந்த பிள்ளைகளுக்கு வழங்கிக் கொண்டு இருப்பதாகவும் அதே போன்று கூன் சோயா எனப்படுகின்ற உணவு உற்பத்தி திட்டத்தினால் வழங்கப்படுகின்ற போஷாக்கு உணவையும் தாங்கள் வழங்கி வருவதாகவும் அவர் கூறினார்

UNICEF நிறுவனத்தினால் உயர் சக்தி செறிவூட்டப்பட்ட பிஸ்கட்டுகளை 5 வயதிற்கு உட்பட்ட போஷாக்கு குறைவான பிள்ளைகளை இளங்கண்டு வழங்கி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியானது கிழக்கு மாகாணத்தில் பிறை எப்.எம். வானொலி ஊடாக (FM 102 Mhz) ஞாயிற்றுக்கிழமைகளில் இரவு 9.45 முதல் 10.15 வரையும் புத்தளம் பிரதேசத்தில் அநூர் எப்.எம்.(FM 96.1 Mhz) வானொலி ஊடாக ஞாயிற்றுக்கிழமை மாலை 6.45 முதல் 7.15 வரையும் ஒலிபரப்பாகின்றது. எமது நிகழ்ச்சி ஒலிப்பதிவுகளை www.radio.voicesofpeace.lk என்ற இணையத்தளத்திலும் கேட்கலாம்.

உங்கள் எண்ணங்களை பகிர்ந்து கொள்ளுங்கள்

மீண்டும் வாழ்வோம்

பிறந்த நாளை உங்கள் நிகழ்வை எண்ணங்களையும் உங்கள் பைட்டிங்களையும் எமக்கு எழுதி அனுப்பிவையுங்கள். அவ்வாறு மீண்டும் வாழ்வோம் பகுதியில் பிரசுரிக்க வசதியிருக்கிறோம்.

தொ.பே.இல. 1039 கொழும்பு
தொ.பே: 077 495 2242
www.lifelinesrilanka.com info@lifelinesrilanka.com

சுவடுகள்

✱ அரசாங்க அதிபர்களின் தகவல்களின் அடிப்படையில் திரட்டப்பட்ட IASC 120ஆவது அறிக்கையின் படி இலங்கையில் 71,912குடும்பங்களைச் சேர்ந்த 257,071 பேர் அகதிகளாக இடம் பெயர்ந்த நிலையில் உள்ளனர்.

✱ சர்வதேச மருத்துவ குழு திருகோணமலை திரியாய் பிரதேசத்தில் நடாத்தி வரும் மருத்துவ முகாமில் வாரத்தில் 5 நாட்களில் 200 ற்கும் அதிகமான நோயாளர்களை பார்வையிடுகின்றது. காதாரா அமைச்சினால் குச்சவெளி பிரதேசத்தில் முழு நேர வைத்தியர் ஒருவர் நியமிக்கப் பட்டதிலிருந்து அவசர தேவைகளில் உதவி வழங்கி வருகின்றது.

✱ மட்டக்களப்பு கிராள் பிரதேசத்தில் 1015 குடும்பங்களைச் சேர்ந்த 3994 நபர்கள் ஏப்ரல் மாதம் 3ம், 4ம் திகதிகளில் மீளக்குடியேறுவர் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏப்ரல் 3ம் திகதி முதல் ஆரம்பமான இவ் மீள் குடியமர்வுகள் முன்னேற்றகரமானதாக உள்ளது. மீள் குடியேறுபவர்களுக்கு உணவு மற்றும் ஏனைய வசதிகளை அரசாங்கம் மற்றும் UNHCR இணைந்து வழங்கி வருகின்றது.

✱ கிளிநொச்சி பிராந்திய சுகாதார திணைக்களம் அறிக்கையின் படி வவுனியாவில் சேமித்து வைக்கப்பட்டுள்ள அத்தியாவசிய மருந்துப் பொருட்களின் முதல் கால்வாசிக்கான போக்குவரத்து வசதிகான அனுமதியினை பாதுகாப்பு அமைச்சு வழங்கியுள்ளது. கடந்த வருட கோட்டாவின் ஒரு பகுதியாக ஒரு லொறி மருந்து பொருட்கள் மற்றும் ஒக்ட்சிஜன் சிலின்டர் போன்றவை கிளிநொச்சியின் அரச கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு மருத்துவ தேவை கருதி ஓமந்தையினூடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பேசும் படம்

இந்த தக்கலாவிப் பழம் புத்தளத்தில் உள்ள இரசாயன பூத்தோட்டத்தில் உள்ளது. புத்தளத்தில் அரசாங்கற்ற நிறுவனமான மக்கள் நம்பிக்கை நிதியம் வேளாண்மை அறிவிருத்தி உக்திகளை விருத்தி செய்வதில் ஈடுபட்டு வருகின்றது. இதன் மூலம் வேளாண்மை மற்றும் கால்நடைகளில் இரசாயண சேர்க்கை சேர்வது தவிர்க்கப்படுகிறது.

மீண்டும் வாழ்வோம்

'மீண்டும் வாழ்வோம்' திட்டமானது இலங்கையின் அரசாங்க சூழ்நிலைகளினால் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களுக்காகவும் மீள்குடியேறி உள்ளவர்களுக்காகவும் தகவல்களை வழங்கும் பரந்துபட்ட மனிதாபிமான செயல்த்திட்ட அமைப்புக்களின் ஒரு அங்கமாகும்.

த.பெ.இல. 1039 கொழும்பு
தொ.பே: 0774952242
மின்அஞ்சல்: info@lifelinesrilanka.com

வாழ்வின் வர்ணங்கள்

நீர்கொகுணமலை நகரட்சி மன்றத்தின் தலைவராக 9 வருடங்களின் மீள் தெரிவு செய்யப்பட்டிருக்கும் **சண்முகராசா கௌரி முதுந்தன்** தனது வாழ்வின் வர்ணங்கள் பற்றி பகிர்ந்து கொள்கின்றார்.

சமாதானத்தைப் பற்றி எல்லோரும் பேசுகின்றார்கள், வானொலியிலே ஒலிபரப்புகின்றார்கள், நோட்டீஸ் அடிக்கின்றார்கள், கதைக்கின்றார்கள் எனக் கூறும் அவர் அதைவிடவும் இவ்விடயத்தை அடிமட்டத்திலிருந்து விளக்க வேண்டும் என்கின்றார். மேலிருந்து ஒரு தீர்மானத்தை எடுத்து அதை மக்களுக்குள் திணிப்பதைவிட ஒரு விடயத்தை உணர்வு பூர்வமாக கொண்டு வர வேண்டும் என்பது இவரது கருத்து. உதாரணத்திற்கு ஒரு மார்க்கட் திறந்தால் 30 கடைகள் இருந்தால் அதை முன்று இனத்திற்கும் சமனாக பிரித்து கொடுத்தால் அவர்கள் ஏதோ ஒரு விதத்தில் பேசி ஒரு உடன்பாட்டுக்குள் வருவார்கள் என கூறும் அவர் ஒன் றாக இருந்தால் தான் வியாபாரம் செய்யலாம் என்ற ஒரு உணர்வு இப்பொழுது அவர்களுக்கு வந்துள்ளது எனவும் கூறுகின்றார். எல்லோரும் ஒன்றாக வியாபாரம் செய்து அடி மட்டத்திலிருந்து சமாதானத்தை கொண்டு வரவேண்டும் என்பது இவருடைய விருப்பம்.

இடம்பெயர் வாழ்வு உருவாக்கும் உளவியல் பிரச்சினைகள்

வவுனியா மாவட்டத்தில் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள உளவியல் தாக்கங்கள் மற்றும் அவர்களுக்கான சிகிச்சைகள் குறித்து கண்டறிய முற்பட்டோம்

மனநல மருத்துவர் ஒருவரை அணுகி எவ்வாறான மன நோய்களால் பாதிக்கப் பட்டவர்கள் அதிகளவில் சிகிச்சைக்கு வருகின்றார்கள் எனக் கேட்டோம்

வவுனியா மாவட்டத்தில் பூந்தோட்டம் நலன்புரி நிலையம் மற்றும் சிதம்பர புரத்தில் அமைந்துள்ள நலன்புரி நிலையம் ஆகியவற்றில் அதிகளவான மக்கள் தங்கியுள்ளனர்

பூந்தோட்டம் நலன்புரி நிலையம் வவுனியா நகருக்கு அருகில் இருப்பதால் அந்த முகாமில் இருந்தே அதிகளவான மக்கள் மருத்துவ சிகிச்சைகளை பெறுவதற்கு வருகை தருவதாகவும் ஒப்பீட்டளவில் சிதம்பரபுரம் நலன்புரி நிலையத்தில் இருந்து வருபவர்களின் எண்ணிக்கை குறைவு என்றும் அவர் குறிப்பிட்டார்.

சிதம்பரபுரம் நலன்புரி நிலையம் வவுனியா நகரில் இருந்து 10 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளதால் அங்கிருந்து சிகிச்சைகளுக்காக வருபவர்களின் தொகை குறைவானது என்று அவர் கூறினார்.

இதைவிடவும் சிதம்பரபுரம் அகதி முகாமில் வாழும் மக்கள் மத்தியில் மன அழுத்தங்களை ஏற்படுத்தக் கூடிய புறக்காரணிகளின் தாக்கம் குறைவாக இருப்பதாக தான் கருதுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வவுனியா மாவட்டத்தில் இடம்பெயர்ந்து வாழும் மக்கள்

குறிப்பாக யுத்தத்தின் நேரடி தாக்கங்கள் மற்றும் யுத்தம் குறித்த அச்ச உணர்வு போன்றன குறைவாக இருப்பது அங்கு வாழும் மக்கள் உளவியல் தாக்கங்களுக்கு உட்படாமல் இருப்பதற்கு காரணமாக அமையலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

பூந்தோட்டம் முகாமில் அவதானித்த மிக முக்கிய பிரச்சினையாக அங்கு இடம்பெற்று வரும் தற்கொலைகளையும் தற்கொலை முயற்சிகளையும் அவர் குறிப்பிட்டார்.

மெலிதான மனநோய்களுக்குள் அச்சம் சார்ந்த மனநோய்கள் மற்றும் மனச்சோர்வு ஆளுமை கோளாறுகள் போன்ற நோய்கள் முக்கியமானவை.

மனநோய் ஒரு நபரில் ஏற்பட்டால் அவருக்கு தொடர்ந்தும் அழுத்தங்கள் இருந்தால் அந்த நோய் தீவிரமடையும் வாய்ப்பு அதிகமாகும் என்றும் அவர் கூறினார்.

சாளரம்

மன்னார் நகரிலிருந்து 23 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள நானாட்டான் நலன்புரி முகாமில் 150 ஆடும் பங்கள் வசிக்கின்றனர். அரிப்பு பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்து தற்போது நானாட்டான் அரிசி ஆலையில் வசிக்கும் அவர்களிடம் ஆரோக்கியம் தொடர்பில் வினவிய போது அவர்கள் பல விடயங்களை கூறினர்.

மலசல கூட வசதி யின்மை, அட்டைகள் தொல்லை, மழைகாலக் காய்ச்சல் என்பன தமக்கு பெரிய பிரச்சினைகளாக உள்ளன என அவர்கள் தெரிவிக்கின்றனர். வயம்பெயரிகளுக்கு அசுகாமையில் வீடுகள் உள்ளதால் தேங்கி நிற்கும் நீரினால் நுளம்புத்தொல்லையும் ஏற்படுவதாக தெரிவிக்கின்றனர். இதனால் ஏற்படும் துர்நாற்றமும் அவர்களின் சுவாசத்திற்காக அச்சுறுத்தலாக உள்ளது.

அரிப்பு பிரதேசத்தை சேர்ந்த சகாயபூணண் கூறுகை தெரிவிக்கையில் இடவசதி இன்மையால் வெயில் வெக்கை. தொல்லை ஒருபுறமும் வருத்தம் துன்பம் ஒருவருக்கு ஏற்பட்டால் ஊரில் இருந்த காலத்தில் ஒரு நாளைக்கு 200 கிராம் புரத உணவாவது உட்கொண்டதாகவும் இங்கு தொழில் இன்மை மற்றும் உணவு பழுதடைதல் காரணமாக அவ்வாறான சத்துள்ள உணவு கிடைப்பதில்லை எனவும் தெரிவிக்கின்றார்.

மன்னார் நானாட்டான் நலன்புரி முகாம்

ஜீலியா ரணவீர என்ற பெண் முகாமில் சுகதரமாக குறித்து கருத்துத்தெரிவிக்கையில் இங்கு உடல் உள சுத்தம் குறைவாக உள்ளதாகவும் மழை வந்த பிறகு இடங்கள் சீரழிந்து உள்ளதால் மக்களும் சுத்தமில்லாமல், வாழ்கின்ற இடத்தையும் சுத்தமில்லாமல் வைத்திருப்பதாக கூறுகின்றார். எல்லோரும் ஒன்றாக இருப்பதால் தொற்று நோய் அபாயம் கூடுதலாக உள்ளதாகவும் தெரிவிக்கின்றார்.

அது மற்றவருக்கும் ஏற்படுகின்றது என தெரிவிக்கின்றார்.

உணவுப் பிரச்சினையை எடுத்துப்பார்த்தால் தமது சொந்த

நெருக்கடிகளின் மத்தியிலும் மருத்துவ சேவைகளை வழங்கும் மன்னார் வைத்தியசாலை

2000 சதுர கி.மீ. பரப்பளவை கொண்ட மன்னார் மாவட்டத்தில் ஒரு லட்சத்திற்கும் அதிகமான மக்கள் வாழ்கின்றனர்.

இந்த மாவட்ட மக்கள் அனைவரும் தமது வைத்தியத்திற்காக மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையையே நம்பியிருக்கின்றனர்

இந்த வைத்தியசாலை பல்வேறு ஆளணி

பிராந்திய சுகாதார பணிப்பாளர் ஸ்டெலா ரஜனி ஜீட்

பற்றாக்குறைகளுடன் இயங்கி வருவதாக கூறுகின்றார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஸ்ரெலா ரஜனி.

15 விஷேட வைத்தியர்கள் கடமையாற்ற வேண்டிய இந்த வைத்தியசாலையில் தற்பொழுது ஒரு விசேட வைத்தியர் கூட கடமையாற்றுவதில்லை என்றும் சுகாதார அமைச்சு விசேட வைத்தியர்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்களை பல தடவைகள் கோரியிருந்த போதிலும் இங்கு கடமையாற்ற எவரும் முன்வரவில்லை என்பது மனவருத்தத்திற்குரியது என்றும் அவர் கூறினார்.

மருத்துவமனை என்பது மனித வாழ்வின் அத்தியாவசிய அங்கமாகும் இங்கு மருத்துவர்களின் தேவை இன்றியமையாதது. ஆனால் மன்னார் பொது மருத்துவ மனையில் 66 வைத்தியர்களின் தேவை இருந்த போதிலும் கூட 34 பேரே கடமையிலுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதேபோல் 172 மருத்துவ தாதியருக்கு பதிலாக 46 பேர் மட்டுமே அங்கு பணிபுரிகின்றனர் .

நாள்தோறும் பலர் சிகிச்சைக்காக இந்த மருத்துவ மனைக்கு வருகின்றனர். ஆனாலும் அவர்களை பார்வையிடுவதற்கு வைத்தியர்கள் செலவிடும் நேரம் மிகவும் குறைவாகவே இருப்பதாக கூறினார் வெளிநோயாளர் பிரிவிற்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள வைத்திய கலாநிதி ராகுலன்.

வெளிநோயாளர் பிரிவில் தாங்கள் தினமும் 700 பேரை பார்வையிடுவதாகவும் எனவே சராசரியாக ஒர நோயாளருடன் 5 நிமிட நேரமே செலவிட முடிவதாக அவர் கூறினார்.

மூன்னர் வைத்தியசாலையின் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவில் மாதாந்தம் 16000 பேர் வந்து சிகிச்சை பெற்றுச் செல்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் விசேட மருத்துவர்கள் இல்லாத குறையை சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலமாக வெளிநாட்டு மருத்துவர்கள் நியர்த்தி செய்து வருவது ஓரளவு ஆறுதலளிக்கும் நிலையாகும்

அன்மைக்கால யுத்த நடவடிக்கைகளால் காயமடைந்து சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட வேண்டிய மக்களும் மன்னார் மாவட்ட வைத்தியசாலைக்கு அதிகமாக வருகை தருவதாக கூறினார் அங்கு மருத்துவ அதிகாரியாக கடமையாற்றி வரும் வைத்திய கலாநிதி கருணா பாலன்.

அரச கட்டுப்பாட்டு பகுதிகளில் ஓரளவிற்கு மக்களின் மருத்துவ வசதிகள் பு??ர்த்தி செய்யப்பட்ட போதிலும் கூட கட்டுப்பாடற்ற பகுதிகளில் உள்ள மக்களின்

மன்னார் வைத்தியசாலை

15 விஷேட வைத்தியர்கள் கடமையாற்ற வேண்டிய இந்த வைத்திய சாலையில் தற்பொழுது ஒரு விசேட வைத்தியர் கூட இல்லை

நிலை பரிதாபத்திற்குரியது என்று அவர் தெரிவித்தார்.

அரச கட்டுப்பாடற்ற பகுதிகளில் ஆளணி பற்றாக்குறை மட்டுமன்றி மருந்து பொருட்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் போக்குவரத்து பிரச்சினைகள் காணப்படுவதாகவும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் அருளாளந்தம் நிக்கலஸ் பிள்ளை கூறினார்.

குறிப்பாக அடம்பன் பகுதிகளில் இருந்த வைத்தியசாலை முற்றாக அழிவடைந்து அங்கிருந்த வைத்தியகளுடன் சேர்ந்து அவருடைய உதவியாளர்களும் கிளிநொச்சியை நோக்கி சென்று கிட்டத்தட்ட 30 கி.மீ. தூரத்தில் உள்ள வெள்ளாங்குளம் பகுதியில் இயங்கிக்கொண்டு இருப்பதாக அரச அதிபர் தெரிவித்தார்

மன்னார் மாவட்டத்தில் உள்ள பொது மருத்துவ மனையின் ஆளணி பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு கழற்சி முறை திட்டம் ஒன்று குறித்து அமைச்சிற்கு அறிவித்துள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இத்திட்டம் ஏற்றுக்கொள்ளப்படுமாயின் ஓரளவிற்கு பிரச்சினைகள் நிவர்த்தி செய்யப்படும் எனது அவர் நம்பிக்கை வெளியிட்டார்..

ஆண்டு தோறும் மன்னார் மாவட்டத்தில் இருந்து குறைந்தது 5 மாணவர்கள் மருத்துவ பீடத்திற்கு தெரிவு செய்யப்படுகின்றனர்.

இவர்கள் ஒவ்வொருவரும் தமது பிறந்த மன்னனிலே கழற்சி முறையில் பணியாற்ற முன்வருவார்கள் ஆயின் தமது குறைபாடு தீர்க்கப்படும் என்கிறார் பிராந்திய சுகாதார பணிப்பாளர் ஸ்டெலா ரஜனி ஜீட்.

சுகாதார பிரச்சினைகளால் அவதியுறும் வடமாகாண மக்கள்

வட மாகாணத்தில் நிலவும் சுகாதார பிரச்சினைகள் குறித்து வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி கனகராஜா நந்தகுமாரவிடம் கேட்கப்பட்ட கேள்விகளும் அதற்கு அவர் தெரிவித்த பதில்களும் வருமாறு:

சுகாதாரம் மருத்துவம் தொடர்பாக வடக்கு மாகாணத்தில் இருக்கின்ற பிரச்சினைகள் என்ன?

வட மாகாணத்தை பொறுத்த வரை சுகாதார பிரச்சனைகள் மாவட்டத்திற்கு மாவட்டம் வித் தியாசமாக உள்ளது. யாழ்ப்பாணத்தை பொறுத்த வரையில் அது இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசத்திற் குள் இருக்கின்ற போதிலும் யாழ்ப்பாணத்திற் குரிய மருந் துகளை கப்பலின் ஊடாகத் தான் அனுப்பக்கூடியதாக இருக்கின்றது. அத்துடன் வக்சீன்கள் மற்றும் அத்தியா வசி யமாக தேவைப்படுகின்ற மருந்துகள் ICRCயின் விமா னங்களின் ஊடாக அனுப்பக் கூடியதாக இருக்கின்றது. இராணுவ கட்டுப்பாட்டு பிரதேச மான மன்னார், வவுனியா பிரதேசங்க ளில் ஓரளவிற்கு ஆளணி மற்றும் மருந்து பொருட்களுக்கான தட்டுப்பாடு போன்ற பிரச்சினை கள் இல்லாதவாறு இயங்கக் கூடியவாறு இருக்கின்றது. ஆனால் கிளிநொச்சி முல்லைத் தீவு மற்றும் ஏனைய இராணுவ கட்டுப்பாடற்ற பிரதேசங் களுக்குள் சுகாதார பிரச்சினை என் பது விதித்தியாசமானது. அப்பிரதேசத்திற்கான பொருட்கள் எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு மத்தியி லேயே எடுத்துச் செல்லப்பட வேண்டி இருக்கின்றது. அது போலவே மருந்துகளும். இப்பிரதேசத்தில் வேலை செய்யும் ஊழியர்களை பொறுத்த வரையில் அவர்களும் கட்டுப் பாடற்ற பிரதேசங்களில் இருந்து கட்டுப்பாட்டு பிரதேசங்களுக்கு சென்று வருவதில் பல சிக்கல்களை எதிர்கொள்ளின்றார்கள். மேலும் வட மாகாணத்திற்குரிய ஆளணி நீண்ட நாட்களாக திருத்தி அமைக்கப்படாமல் உள்ளது.

இந்த பிரச்சினைகளை நிறை வேற்றுவதற்கு நீங்கள் என்ன மாதிரியான நடவடிக்கைகளை எடுக்கின்றீர்கள்?

வட மாகாணத்தில் நிலவும் ஆளணி பற்றாக்குறையை நிவர் த்தி செய்யும் முகமாக யாழ்ப் பாண பிராந்திய சுகாதார பணி மனையின் கீழ் இயங்கும் பிராந் திய பயிற்சி நிலையத்தின் ஊடாக மருத்துவ மாதுக்களுக்கான பயிற்சி நெறி, மருந்து கலவையா

வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி கனகராஜா நந்தகுமாரன்

ளர்களுக்கான பயிற்சி நெறி மற் றும் மேற்பார்வை குடும்ப நல மாதுக்களுக்கான பயிற்சி நெறி

'50 பேரை புதிதாக பொதுச் சுகாதார பரிசோதகர்களாக சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பத்தை கோரி இருந்த போதிலும் 14 பேரே இதற்கான தகுதியை பெற்றிருந்தனர்'

பொது சுகாதார பரிசோதகர்களுக் கான பயிற்சி நெறி இப்படியான பயிற்சி நெறிகள் இயன்ற அள விற்கு நடாத்தப்பட்டு வருகின் றன. இதன் மூலம் ஓரளவிற்கா வது ஆளணி பற்றாக்குறையை நிவர்த்தி செய்யக் கூடியதாக இருக்கின்றது. இப்பிரதேசத்தில் சுகாதார பிரச்சினை போல கல்வி வசதிகளும் வீழ்ச்சியடைந்து ள்ள மையினால் அடிப்படை தகுதி களுடன் கூடிய ஆளணிகளை பெற்றுக் கொள்வதில் பெரிய இடர்பாடு காணப்படுகின்றது. உதாரணமாக 50 பேரை புதி தாக பொதுச் சுகாதார பரிசோதகர் களாக சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பத்தைக்கோரி இருந்த போதிலும் 14 பேரே இதற்கான தகுதியை பெற்றிருந்தனர். இத னால் பிரதேசத்தில் இருந்து தெரிவு செய்ய முடியாமலும் உள் ளது அதேபோல் ஏனைய பிரதே சத்தில் இருந்தும் தெரிவு செய்ய முடியாமலும் உள்ளது.

இந்த மாகாணத்தில் உள்ள உள் நாட்டில் இடம்பெயர் ந்த மக்களுக்குள்ள சுகாதார மருத்துவ பிரச்சினைகள் என்ன?

இடம்பெயர்ந்த மக்களுக் கான மருத்துவ சேவைகள் நடமாடும் மருத்துவ முகாம் கள் மூலம் வைத்தியர்கள், தாதிகள், போன்றோர் அந் தந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு அவர்களுக் குரிய மருத்துவ தேவைகள் இயன்றளவிற்கு நிறைவேற்றி வைக்கப்படுகின்றது.

பெண்களுக்குரிய மிகப் பெரிய சுகாதார பிரச்சினை என்ன என்று நினைக்கின் றீர்கள்?

இப் பிரதேசங்களில் கர்ப் பினித் தாய்மார்களை, குழற் றைகளை பார்ப்பதற்குரிய விஷேட வைத்திய நிபுணர் கள் மிகக் குறைந்த அளவிலேயே இருக்கிறார்கள். வவுனியா வில் 2 மகப்பேற்று வைத் திய நிபுணர்கள் இருக்கி றார்கள். யாழ் போதனா வைத்திய சாலையில் ஓரள விற்கு அவர்களுடைய தேவைகளை பூர்த்தி செய்யக் கூடியதாக இருக் கின்றது. ஆனால் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் போன்ற பிரதேசங்களில் வைத்திய நிபுணர் களே இல்லை. கர்ப் பினித் தாய் மார்களுக்கு வேண் டிய அவசர மான சிகிச்சைகள், பிரக்கும் குழந் தைகளுக்கு வேண்டிய சிகிச்சை களை வழங்க முடியாமல் உள் ளது. அரச சார்பற்ற நிறுவனத் தின் ஊடாக சில வைத்தியர்கள் வரவழைக்கப்படினும் அது ஓரளவிற்கு தான் சாத்தியமாக உள்ளது.

உங்கள் கதைகள்

மீண்டும் வாழ்வோம் வானொலி நிகழ்ச்சியில் புதிதாக உங்கள் கதைகள் இடம்பெறக் காத்திருக்கின்றன. ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் ஒலிபரப்பாகும் நாடகங்களின் தொகுப்பை மீண்டும் வாழ்வோம் பத்திரிகை வாயிலாகவும் உங்களுக்கு அறியத் தருகின்றோம். வடக்கு கிழக்கு பகுதிகளில் இருந்து பல்வேறு காரணங்களால் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களின் அடிப்படை உரிமைகளை அவர்களுக்கு எடுத்துக் கூறும் வகையிலே இந்தக் குறு நாடகங்கள் அமைகின்றன. இதன் அடிப்படையில் பெண்களின் உரிமைகளை மையமாகக் கொண்டு அமைந்த 'உணர்வுகள்' குறுநாடகத்தின் தொகுப்பு.



சுக வாழ்வு

நலன்புரி முகாமில் வசிக்கும் மனோராணி தம்பதியினருக்கு இரண்டு வயதில் குழந்தை இருக்கிறது. நலன்புரி முகாம்களில் தொற்று நோய்கள் பரவுவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகமாக காணப்படுகிறது. ராணியின் குழந்தைக்கு திடீரென காய்ச்சல் வருகிறது. வேலைக்குச் சென்ற மனோவை உடனடியாக வீட்டுக்கு வரச்சொல்லி தகவல் அனுப்புகிறாள். வீட்டுக்கு வந்த மனோ குழந்தையை பார்த்து விட்டு காய்ச்சலுக்குரிய ஏதாவது மருந்தை கொடுக்கச் சொல்கிறாள். வைத்தியரின் ஆலோசனை இல்லாமல் குழந்தைக்கு எந்த மருந்தையும் கொடுக்க கூடாது என்றும் குழந்தையை வைத்தியசாலைக்கு அழைத்து செல்லப் போவதாகவும் ராணி கூறுகிறாள். ஆத்தநேரத்தில் மனோவின் கையில் பணம் இல்லாததால் அவசரப்பட வேண்டாம் என்று கூறுகிறாள். ராணிக்கு குழந்தையை நினைத்து பயம் ஏற்படுகிறது. காரணம் எதிர் வீட்டுக் குழந்தைக்கு மலேரியா காய்ச்சல் தொற்றியுள்ளதாக கேள்விப்படுகிறாள். ராணி குழந்தையை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்கிறாள்.

வைத்தியரிடம் குழந்தையின் உடல் நிலைபற்றிக் கூறுகி றாள். வைத்தியர் குழந்தைக்கு இரத்த பரிசோதனை செய்து வருமாறு கூறுகிறார். இரத்தப் பரிசோதனை செய்யப்படுகிறது. குழந்தைக்கு மலேரியா தொற்று இருப்பதாக தெரிவுவரு கிறது. மருந்துகள் முறையாக கொடுக்கப்பட வேண்டும் என்றும் நுளம்புக் கடியில் இருந்து குழந்தையை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும் என்றும் வைத்தியர் ஆலோசனை கூறுகிறார். மறுபக்கம் பக்கத்து வீட்டு ரதி ராணியின் குழந்தையின் உடல் நிலையைப் பற்றி அறிவதற்கு ராணியின் வீட்டிற்கு வருகிறாள். குழந்தைக்கு மலேரியா தொற்றி இருப்பதை அறிந்து முகாமில் ஏற்பட்டுள்ள சுகாதார சீர்கேடுகள் பற்றி கூறுகிறாள். பள்ளங்களில் மழைநீர் தேங்கி நிற்பதால் நுளம்பு பெருகுவதாகவும் நுளம்பின் மூலமே மலேரியா தொற்றுவதாகவும் கூறுகிறாள். குடும்பங்கள் அதிக மாக இருக்கும் இடங்களில் சுற்றுப்புறத்தை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். வீட்டைச் சுற்றியுள்ள குப்பைகளை அகற்றி விடு என்று கூறுகிறாள். சில தினங்கள் சென்றும் குழந்தைக்கு காய்ச்சல் குன மடையாததால் மறுபடியும் மருத்துவமனிடம் செல்கிறார்கள். வைத்தியர் மலேரியா காய்ச்சல் ஏற்பட்டால் உடனடியாக சுகமாகாது. சில நாட்கள் செல்ல வேண்டும் என்று கூறுகிறார். தொடர்ந்து சுற்றுப்புற சூழலை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். தண்ணீர் தேங்கி நிற்கக் கூடிய சிரட்டை, பிளாஸ்டிக் போத்தல் ஆகியவற்றை அகற்றிவிட வேண்டும் என்றும் குப்பைகளை எரித்து விட வேண்டும் என்றும் கூறுகிறார். அத்தோடு கட்டாயறிய தண்ணீரையே குடிக்க வேண்டும் என்றும் கூறுகிறார். நுளம்பினால் மலேரியா மட்டுமன்றி டெங்கு யானைக்கால் ஆகிய தொற்று நோய்களும் பரவ வாய்ப்பு ஏற்படும் என்றும் ஆலோசனை வழங்குகிறார். பொதுவாகவே அகதி முகாம் நலன்புரி முகாம்களில் தொற்று நோய்கள் பரவ வாய்ப்பு அதிகமாக உள்ளது. ஆகையால் நம்மை சுற்றியுள்ள சூழலை சுத்தமாக வைத்திருந்தாலே தேக ஆரோக்கியத்துடன் வாழலாம்.

மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியின் உங்கள் கதைகள் பகுதிக்கு உங் கள் வாழ்க்கையில் இடம்பெற்ற சம்பவங்களை எழுதி அனுப்புங்கள். இவற்றை நாடக வடிவில் தொகுத்து உங்கள் கதைகளாக ஒலிபரப்ப காத்திருக்கின்றோம். உங்கள் கதைகள் மற்றவர்களுக்கும் படிப்பினை யாக அமையும் என்பதே மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியின் எதிர் பார்ப்பாகும்.

தகவல் பெட்டி

இலங்கையில் மனிதாபிமான மற்றும் அரிவிருத்தி உதவிக்கான வழிகாட்டல் கோட்பாடுகள்

சர்வதேச மனித உரிமைகள் சட்டம், சர்வதேச மனிதாபிமானச் சட்டம், இலங்கைச் சட்டம் மற்றும் பிரேமோகிக்கப்படக்கூடிய அனைத்து சர்வதேச நியமங்களின் வழிகாட்டல்களின்படி, இலங்கையில் மனிதாபிமான மற்றும் அபிவிருத்தி உதவிகளை செயற்றிறனுடன் அமுல்படுத்துவதற்கு ஏதுவாக பின்வரும் வழிகாட்டல் கோட்பாடுகளை கீழே குறிப்பிட்டப்பட்ட செயலெப்பமிட்டோர் மீள் உறுதிப்படுத்துகின்றனர். இதன் கீழ் கையெப்ப மிட்டோர் தங்களது பணியாளர்கள் மற்றும் அவர்களது நடவடிக்கை அமுல்படுத்தும் பங்காளர்கள் என்போர் (சர்வதேச/உள்ளூர் அரசசார் பற்ற ஸ்தாபனங்கள், ஐ.நா, செஞ் சிலுவைச் சங்கம் போன்றன) பின்வரும் 10 கோட்பாடுகளை நடைமுறைச் சட்டங்களின் கீழ் இயன்றளவு கடைப்பிடிக்க பெரும் முயற்சி செய்வர்.

1. **மனிதாபிமான மற்றும் அபிவிருத்தி உதவியின் குறிக்கோள்:** இலங்கை மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதில், பங்களிப்பதற்கு நாங்கள் ஒன்றிணைந்து பணி யாற்றுகின்றோம் எங்கள் உதவிகள் மக்களின் வேதனைகளை நீக்குதல், வறுமையை ஒழித்தல், இலங்கையின் மோதல் நிலைமைகளுக்கு அமைதியான தீர்வொன் றிற்கு ஆதர வளித்தல் உட்பட சமூகங்கள் தன்னிறைவை அடைய உதவுதல் போன்றவை குறித்துக் கவனம் செலுத் துகின்றன.

எங்களது செயற்பாடுகள் சர்வதேச அரச சார்பற்ற ஸ்தாபனங்களின் கோட்பாடுகள் மற்றும் செஞ்சிலுவைச் சங்கம்- செம்பிறை இயக்கங்களது ஒழுக்கக் கோவையுடன் நிலையானதாக இருப்பதை நாம் உறுதிப் படுத்த விரும்புகிறோம். மேலதிக தகவல்களுக்கு தயவுசெய்து http://www.ifrc.org/publicat/conduct/code.asp உடன் தொடர்பை ஏற்படுத்தவும். இவ்வழிகாட்டல் கோட்பாடுகள் ஒரு சர்வதேச ஒப்பந்தமோ அல்லது சட்ட வலுவான ஆவணமோ அல்ல.

Embassy of the Federal Republic of Germany Colombo
JAPAN Embassy of Japan
The Netherlands Embassy
British High Commission
Embassy of Sweden
European Commission
Embassy of Switzerland
Australian Government AusAID
United Nations
NORWEGIAN REFUGEE COUNCIL
ACTED
Canadian High Commission Haut-commissariat du Canada
The United States Embassy

சீவீதும் வாழ்வோம் (LifeLine) செயல்திட்டமானது USAID இனால் நிதியளிக்கப்பட்டு Internews Network இனால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது

INTERNEWS USAID FROM THE AMERICAN PEOPLE

இப்பத்திரிகை எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் (சிலோன்) லிமிட்டெட்-ராஸ் கொழும்பு-14, கிராண்ட்பாஸ் வீதி, 185 ஆம் இலக்கத்தில் 2008ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.